


05.04.2025

தலைப்பு செய்திகள்

- மீனவர்களிடம் மனிதநேய அடிப்படையிலான அணுகுமுறை மேற்கொள்வது குறித்து இலங்கை அரசுடன் விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக 522 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.
- மாநில அரசின் நலத்திட்டங்கள் குறித்து களஆய்வு மேற்கொள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று உதகை சென்றுள்ளார்.
- தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி சென்ற ஆண்டு 9.69 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.
- ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

பிரதமர் - இலங்கை

இலங்கை அரசுடன் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் மனிதநேய அடிப்படையிலான அணுகுமுறை மேற்கொள்வது குறித்து விவாதிக்கப் பட்டதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் அனுரகுமார திசநாயக உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று கொழும்புவில் மேற்கொண்ட பின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், இலங்கை மீனவர்களின் நலன்கருதி மிக பிரம்மாண்டமான சேமிப்பு கிடங்கு இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர், அரசியல் சாசன செயலாக்க வழியில் பணியாற்ற உறுதிபூண்டார்.

அண்டை நாடுகள் மற்றும் இந்தியாவின் கடல்சார் கொள்கையில் இலங்கை முதலிடம் வகிப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியை கவுரவிக்கும் வகையில் இலங்கை அரசின் மித்ர விபூஷனா விருதை அதிபர் அனுரகுமார திசநாயக, பிரதமருக்கு வழங்கினார்.

இவ்விருது 140 கோடி இந்தியர்களை கவுரவிக்கும் விருதாகும் என பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இந்திய மக்களிடையிலான ஆழமான நட்புறவையும், வரலாற்று பிணைப்பையும் இந்த விருது பறைசாற்றுவதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மித்ர விபூஷண விருதிற்காக, அதிபருக்கும் அந்நாட்டு அரசுக்கும், இலங்கை மக்களுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

முன்னதாக எரிசக்தி, வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

❖❖❖❖❖

பிரதமர் – ராமேஸ்வரம்

இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு நாளை ராமேஸ்வரம் வரும் பிரதமர் தமிழ்நாட்டில் 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பில் ரயில் சாலை திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதோடு புதிய திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து உரை நிகழ்த்துகிறார்.

நாட்டின் முதலாவது செங்குத்து தூக்குகடல் பாலமான புதிய பாம்பன் ரயில் பாலத்தை திறந்து வைத்து, ராமேஸ்வரம் - தாம்பரம் இடையேயான ரயில் சேவையை பிரதமர் தொடங்கிவைக்கவுள்ளார்.

இதனிடையே ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ், பாம்பன் புதிய ரயில் பாலத்தை இன்று நேரில் ஆய்வுசெய்கிறார்

பிரதமரின் வருகையை ஒட்டி ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலுக்குள் நாளை காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை தரிசனம் மற்றும் தீர்த்தம் நீராட பக்தர்களுக்கு அனுமதி இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரத்தில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மதுரை விமான நிலையத்திற்கு பிரதமர் வரவுள்ளதால் பாதுகாப்பு கருதி இப்பகுதியில் ட்ரோன்கள் பறக்க மாவட்ட நிர்வாகம் தடைவிதித்துள்ளது.

மதுரை விமான நிலையத்தில் மத்திய தொழில்பாதுகாப்புடை, போலீசாரின் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு போர்ச்சுக்கல், ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு நாளைமறுநாள் முதல் 4 நாட்கள் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்.

குடியரசு தலைவரின் இந்த பயணம் இருநாடுகளுடன் இந்தியாவிற்கான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், விரிவுப்படுத்தவும் வாய்ப்புள்ளதாகவும், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவையும் மேம்படுத்தும் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

பேரிடர் நிவாரண நிதி

தமிழகத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக 522 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தலைமையிலான உயர்நிலை குழு தமிழகம், புதுச்சேரி, ஹிமாச்சல பிரதேசம், பீஹார் மாநிலங்களுக்கு மத்திய அரசின் கூடுதல நிதியாக ஆயிரத்து 280 கோடி ரூபாயை இன்று அனுமதித்துள்ளது.

சென்ற நிதியாண்டில் மத்திய அரசு 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பேரிடர் நிவாரண நிதியை பல்வேறு மாநிலங்களுக்கு இருபிரிவுகளாக அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

இதனிடையே திரு. அமித்ஷா சட்டீஸ்கட் மாநிலம், ராய்பூரில் இன்று நக்சல் ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொள்கிறார்.

எதிர்காலத்தில் நக்சல் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க மேற்கொள்ளவேண்டிய யுக்திகள் குறித்து துறை ரீதியாக அவர் ஆய்வுமேற்கொள்ளவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

தேசிய கடல்சார் தினம்

62-வது தேசிய கடல்சார் தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி பிரதமர் வெளியிட்ட செய்தியில நாட்டின் வளமான கடல்சார் வரலாற்றையும், தேசத்தை கட்டியெழுப்புவதில் இத்துறை ஆற்றிய பங்கையும் நினைவுகூர்ந்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக கடல்சார் துறையையும், துறைமுகங்களையும் தொடர்ந்து வலுப்படுத்துவோம் என சமூகவலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி புதுதில்லியில் கடல்சார் விழிப்புணர்வு வாக்கத்தான் நிகழ்ச்சிகளை மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இன்று தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசியஅவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய தூணாக கடல்சார் துறை திகழ்கிறது என்றார்.

வளர்ந்த நாடான இந்தியாவை மாற்ற அனைவரும் தங்களது பங்களிப்பை அளிக்கவேண்டுமென வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உதகையில் இன்றும் நாளையும் களஆய்வு மேற்கொள்கிறார்.

நீலகிரி மாவட்டத்தில் 727 கோடி ரூபாய் மதிப்பில் ஆயிரத்து 703 முடிவுற்ற பணிகளை திறந்து வைப்பதோடு 56 புதிய திட்டப்பணிகளுக்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார்

இந்நிகழ்ச்சியில் 15 ஆயிரத்து 634 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்குகிறார்.

இதனிடையே நாட்டிலேயே மிக அதிக விகித வளர்ச்சியை தமிழ்நாடு பதிவுசெய்துள்ளதாக முதலமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

பாலின சமத்துவம், அனைத்து பகுதிகளுக்கும் சமமான வளர்ச்சி என அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதால் 9.69 சதவிகித வளர்ச்சியை மாநிலம் பதிவுசெய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

b.Mh;.gp.uh[h

jkpo;ehl;bd; nghUshjhu tsh;r;rp nrd;w epjpahz;by; 9.69 rjtpfpjkhf mjpfhpj;Js;sJ vd;W khepy njhopy;Jiw mikr;rh; jpU.b.Mh;.gp.uh[h njhptpj;Js;shh;.

kj;jpa Gs;spapay; jpl;l mkyhf;fj;Jiwapd; mwpf;ifapy; ,J njhptpf;fg;gl;Ls;sjhf kfpo;r;rp njhptpj;j mth; ,Jtiu ,y;yhj msthf jkpofj;jpd; nghUshjhu tsh;r;rp mjpfhpj;J rhjid gilj;Js;sjhf jkpJ r%ftiyjs gjptpy; Fwpg;gpl;Ls;shh;.

❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் அடுத்தமாதம் 9-ம் தேதி பயன்பாட்டிற்கு வரவுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

இந்நிலைய பணிகளை இன்று ஆய்வுசெய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருச்சி காவிரி பாலப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

விழுப்புரம் வாய்ஸ்

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் பயிர்காப்பீடு திட்டம் பெரிதும் பயனளிப்பதாக விவசாயி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

தர்மபுரி வாய்ஸ்

தர்மபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

திருவண்ணாமலை குப்பநத்தம் நீர்தேக்கத்திலிருந்து இன்றுமுதல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப் பட்டது.

அடுத்தமாதம் 3-ம் தேதிவரை திறக்கப்படும் தண்ணீரின் மூலம் 9 ஆயிரத்து 432 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

நாகை மாவட்டத்தில் காலியாகவுள்ள அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு நாளைமறுநாள் முதல் வரும் 24-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் கீழகுளத்தூர் கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் வரும் 14-ம் தேதி நடைபெறுவதை ஒட்டி மாடுகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான பதிவுகள் வரும் 8, 9 தேதிகளில் இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவ கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள் மேலாண் விதிகளை முறையாக பின்பற்ற வேண்டுமென ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் வலியுறுத்தியுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகை பெற அடுத்தமாதம் 30-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.மோகனசந்திரன் தெரிவித்துள்ளார்.

கொடைக்கானல் மன்னவனூர் சூழல் சுற்றுலா மையத்தில் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இன்றுமுதல் சுற்றுலா பயணிகளுக்கு மீண்டும் அனுமதி அளிக்கப்படுவதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

நீர்வரத்து அதிகரிப்பு

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் மழைக் காரணமாக சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 16 அடி உயர்ந்து 81 அடியை எட்டியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கும்பக்கரை அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பவானி சாகர் அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து இன்று 6 ஆயிரத்து 214 கனஅடியாக அதிகரித்துள்ளது.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கோவில்

பழனி திருஆவினங்குடியில் பங்குனி உத்திர திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

தென்காசி அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோவில் சித்திரை விஷு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

இரவு எழரை மணிக்கு சண்டிகரில் ராஜஸ்தான் ராயல்ஸ் - பஞ்சாப் கிங்ஸுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

குத்துசண்டை

பிரேசிலில் நடைபெறும் உலக குத்துசண்டை போட்டியின் 70 கிலோ எடை பிரிவின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் ஹித்தேஷ் இங்கிலாந்தின் Odel Kamara-வை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் 65 கிலோ எடைபிரிவின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் அபிநாஷ் - பிரேசிலின் யூரிரைஸ் உடன் மோதவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.